## 6.5 சமத்துவபுரம் திட்டம்– ‘பெரியார் நினைவு சமத்துவபுர திட்டம்’ என அழைத்தல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (நிஎ2) துறை

அரசாணை (நிலை) எண். 50 நாள் : 8.4.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.171, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22.10.97
2. அரசு கடிதம் எண் 31262/நிஎ.4/97–3 நாள் 23.12.97
3. அரசாணை (நிலை) எண்.43 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 18.05.98
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந.1) அ.சா.கு.எண்.32098/98–4 நாள் 20.3.99

**ஆணை**

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில், தமிழக அரசு “சமத்துவபுரம்” என்ற புதிய திட்டத்தை உருவாக்கி ஆணையிட்டது. இனி இத்திட்டம், “பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்” என அழைக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிடப்படுகிறது. எனவே, மாவட்டங்களில் இனி அமையவிருக்கும் சமத்துவபுரங்கள் அனைத்திற்கும் “பெரியார் நினைவு சமத்துவபுரம்” என்று பெயரிடப்பட வேண்டுமெனவும், இதுவரையில் மாவட்டங்களில் அமைத்து பெயரிடப்பட்ட சமத்துவபுரங்களுக்கு “பெரியார் நினைவு சமத்துவபுரம்” என திருத்தி ஒரே சீராக பெயரிடப்பட வேண்டுமெனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. இரத்தினசாமி**
அரசு செயலர்